# பாரத ஸ்டேட் பாங்கு

ஒடுக்கப்பட்ட சொத்து நிர்வாக கிளை

ரெட் கிராஸ் பில்டிங்ஸ்
**32,** மாண்டியத் ரோடு,
எழும்பூர், சென்னை-600 008.
Ph: 044-2888 1000

## விற்பனை மற்றும் டெண்டர் அறிவிப்பு

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI ACT) -இன் கீழ் பாரத ஸ்டேட் பாங்கு மற்றும் இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி-ல் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்தல்.**

**கடன்தாரர் Mrs.பிரபா பாலகோபால், M/s.மேக்னோ காயில்ஸ் மற்றும் மேக்னோ டைனமிக்ஸ் (Mrs. Prabha Balagopal, M/s Magno Coils and Magno Dynamics) ஆகியோர் பாரத ஸ்டேட் பாங்கு, அம்பத்தூர் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் கிளை, சென்னை-ல்** கீழ்க்கண்ட சொத்தினை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார்கள். அந்த கடனில் வங்கிக்கு செலுத்தவேண்டிய நிலுவையிலுள்ள 11.04.2010 அன்று உள்ளபடி தொகை **ரூ.2,60,63,034/-** (ரூபாய் இரண்டு கோடியே அறுபது லட்சத்து அறுபத்தி மூன்றாயிரத்து முப்பத்தி நான்கு மட்டும்) மற்றும் அதன் மீதான வட்டி, மற்றும் இதர செலவுகள். **SARFAESI ACTன் படி பிரிவு 13(2) ன் கீழ் 22.09.2008 அன்று அறிவிப்பு அனுப்பியபடியாலும் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கீழே கொடுக்கப்பட்டுள்ள ஷெட்யூல் A-ல் உள்ள அடமானம் வைத்துள்ள Mrs.பிரபா கோபாலன் (கடன்தாரர்/ஜாமீன்தாரர்) என்பவரின்** சொத்தினை SARFAESI ACT-ன்படி 05.01.2009 அன்று கையகப்படுத்தி உள்ளபடியாலும் வங்கியானது கடன்தொகையை வசூலிப்பதற்காக SARFAESI ACT உடன்படிக்க விதி 6, 7, 8 & 9 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002ன் கீழ் விற்பனை செய்ய முடிவெடுத்துள்ளது.

**கடன்தாரர் M/s.மேக்னோ காயில்ஸ் (M/s Magno Coils) என்ற நிறுவனம் இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி (SIDBI), அம்பத்தூர் கிளையில்** கீழ்க்கண்ட சொத்தினை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளது. அந்த கடனில் வங்கிக்கு செலுத்தவேண்டிய நிலுவையிலுள்ள 11.04.2010 அன்று உள்ளபடி தொகை **ரூ.1,42,71,944.68** (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தி இரண்டு லட்சத்து எழுபத்தி ஓராயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி நான்கு மற்றும் பைசா அறுபத்தி எட்டு மட்டும்) மற்றும் அதன் மீதான வட்டி, மற்றும் இதர செலவுகள். **SARFAESI ACTன் படி பிரிவு 13(2) ன் கீழ் 13.05.2008 அன்று அறிவிப்பு அனுப்பியபடியாலும் SIDBI-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கீழே கொடுக்கப்பட்டுள்ள ஷெட்யூல் B-ல் உள்ள அடமானம் வைத்துள்ள Mrs.K.C.பாலகோபால் (ஜாமீன்தாரர்/அடமாதாரர்) என்பவரின்** சொத்தினை 10.09.2008 அன்று கையகப்படுத்தி உள்ளபடியாலும் கடன்தொகையை வசூலிப்பதற்காக சட்டத்தின் படி விற்பனை செய்ய முடிவெடுத்துள்ளது

### விற்பனை விவரம்

| ஏலம் நடைபெறும் இடம் | ஏலம் நடைபெறும் நாள்/நேரம் |
|---|---|
| பாரத ஸ்டேட் பாங்கு, ஒடுக்கப்பட்ட சொத்து நிர்வாக கிளை, ரெட் கிராஸ் பில்டிங்ஸ், 2வது தளம், **32,** மாண்டியத் ரோடு, எழும்பூர், சென்னை-600 008. | **27.05.2010** காலை **11.30** மணிக்கு |

### அசையா சொத்துக்கள் விபரம்

**ஷெட்யூல்-'A'** (பாரத ஸ்டேட் பாங்கு-ல் அடமானமாக வைக்கப்பட்டது)

மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் சார்பதிவு மாவட்டத்தின் எல்லைக்குட்பட்ட R.S.எண்.3856/1 பகுதி (பழைய சர்வே எண்.183, 191, 194), **ப்ளாட் எண்.A4, முதல் தளம், பிளாக்-A, சக்தி அப்பார்ட்மென்ட்ஸ், பழைய கதவு எண்.17/3, புதிய எண்.20, செனடாப் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை என்னும் முகவரியிலுள்ள 800 ச.அடி ப்ளாட்**. மொத்தமுள்ள 3200 ச.அடி நிலத்தில் ஏறக்குறைய 1/16 (அதாவது 200 ச.அடி) பிரிக்கப்படாத பங்கு மற்றும் மாநகராட்சி சொத்து வரி மதிப்பீட்டு எண்.08/116/0118/25 படி அனைத்து உரிமைகளுடன் பொது வழிப்பாதை. **Smt.பிரபா பாலகோபால்-க்கு சொந்தமானது**. அதன் எல்லைகள் **வடக்கு:** Mr.ராமநாதனின் மனை எண்.7, **தெற்கு:** LA.No.22/74 படி 16 அடி அகல ரோடு, **கிழக்கு:** LA.No.22/74 கீழ் Dr.ராய்-க்கு சொந்தமான மனை எண்.7/A/A, **மேற்கு:** LA.No.22/74 கீழ் Mr.நரேஷ்-க்கு சொந்தமான மனை எண்.7/A/C.

**குறைந்த பட்ச கேட்பு விலை : ரூ.43,00,000/-** (ரூபாய் நாற்பத்தி மூன்று லட்சம் மட்டும்)

**ஷெட்யூல்-'B' (இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி-ல் அடமானமாக வைக்கப்பட்டது)**

மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் சார்பதிவு மாவட்டத்தின் எல்லைக்குட்பட்ட R.S.எண்.3856/1 பகுதி (பழைய சர்வே எண்.183, 190, 191 & 194), **ப்ளாட் எண்.A5 (1 & 2), முதல் தளம், பிளாக்-A, சக்தி அப்பார்ட்மென்ட்ஸ், பழைய கதவு எண்.17/5A, செனடாப் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை என்னும் முகவரியிலுள்ள 1220 ச.அடி ப்ளாட்**. மொத்தமுள்ள 3200 ச.அடி நிலத்தில் ஏறக்குறைய 1/8 (அதாவது 400 ச.அடி) பிரிக்கப்படாத பங்கு. இரண்டு விற்பனை பத்திர எண்கள் (1) 19.03.1979 தேதியிட்ட டாக்குமென்ட் எண்.494 (2) 19.03.1979 தேதியிட்ட டாக்குமென்ட் எண்.495 படி மாநகராட்சி சொத்து வரி மதிப்பீட்டு எண்.08/116/0118/25 படி அனைத்து உரிமைகளுடன் பொது வழிப்பாதை. **Shri.K.C.பாலகோபால்-க்கு சொந்தமானது**.

**குறைந்த பட்ச கேட்பு விலை : ரூ.64,58,000/-** (ரூபாய் அறுபத்தி நான்கு லட்சத்து ஐம்பத்தி எட்டாயிரம் மட்டும்)

### விதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. **உள்ள இடத்தில் உள்ளவாறு என்ற அடிப்படையில் சொத்து விற்பனை செய்யப்படும்.** ஏலத்தில் பங்கேற்பதற்கு முன் இவ்விஷயத்தில் அனைத்து விபரங்களையும் திருப்தியாக நன்கு அறிந்து தெரிந்து கொள்வது அவசியம். வங்கி எவ்விதத்திலும் சொத்தின் வகை, தரம், அளவு இவற்றிற்கு ஜாமீன் அல்லது உத்திரவாதம் எதுவும் வழங்காது. **உள்ளபடியே சுவாதீனம் செய்யப்பட்ட சொத்துக்களானது (physical possession of the properties) வெற்றிபெற்ற விலைக்குறிப்பிட்டாளர் மற்றும் வாங்குபவருக்கு வழங்கப்படும்.**
2. **ஷெட்யூல் 'A' மற்றும் ஷெட்யூல் 'B'-ல் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் ஒரே தொகுப்பாகத்தான் விற்கப்படும். ஏனென்றால் இரண்டு சொத்துக்களும் ஒன்றாக மற்றும் ஒரே நுழைவு வாயில் கொண்டது. அதன் ஒட்டுமொத்த குறைந்தபட்ச கேட்பு விலை ரூ.1,07,58,000/- (ஒரு கோடியே ஏழு லட்சத்து ஐம்பத்தி எட்டாயிரம் மட்டும்)**
3. டெண்டர்/ஏலத்தில் கலந்து கொள்ளபவர்கள் காப்புத் தொகையாக ஒட்டுமொத்த குறைந்தபட்ச கேட்புத்தொகையில் (Reserve Price)10% தொகையை வங்கிக்காசோலை (BC) / கேட்பு வரையோலை (DD) மூலமாக பாரத ஸ்டேட் பாங்கு, ஒடுக்கப்பட்ட சொத்து நிர்வாக கிளை என்ற பெயரில் சென்னையில் பெறத்தக்க வகையில் உரிய டெண்டர் படிவத்துடன் சீலிட்ட கவரிலிட்டு சமர்ப்பிக்க வேண்டும். ஏலத்தில் வெற்றி பெறவில்லையாயின், இந்தத்தொகை வட்டியின்றி திருப்பித் தரப்படும்.
4. ஒட்டுமொத்த குறைந்தபட்ச கேட்பு விலைக்கு கீழ் கோரப்படும் மற்றும் டேவணித்தொகை இல்லாத விலைக்குறிப்பீடுகள் நிராகரிக்கப்படும்.
5. நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்கள் அடங்கிய டெண்டர் படிவங்களை கீழ்க்கையொப்பமிட்ட அதிகாரியின் அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும் டெண்டர் படிவ கட்டணமான ரூ.500/- ஐ (திருப்பித்தரப்படமாட்டாது). ஒவ்வொரு சொத்துக்கும், வங்கி காசோலை / கேட்பு வரைவோலைவடிவில் (சென்னையில் பெறத்தக்க வகையில்) **பாரத ஸ்டேட் பாங்கு ஒடுக்கப்பட்ட சொத்து நிர்வாகக் கிளை, சென்னை-8 (SBI, SAM Branch,Chennai-8) என்ற பெயரில் 26.05.2010 தேதிக்குள் செலுத்தி பெறலாம்.**
6. **டெண்டர்களை ஏலம் நடைபெறும் இடத்தில் (ஒடுக்கப்பட்ட சொத்து நிர்வாகக் கிளை, எழும்பூர், சென்னை) சமர்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 26.05.2010 மாலை 5.00 மணி வரை.**
7. சொத்து உயர்ந்தபட்ச விலைக்குறிப்பிட்டாளாருக்கு விற்கப்படும். ஒரே தொகையை குறிப்பிட்ட விலைக்குறிப்பிட்டாளர்கள் இருக்குமானால் அவற்றின் விலைக்குறிப்பிட்டாளர்களின் இடையில் மட்டுமே ஏலம் நடத்தப்படும். வெற்றிபெற்ற விலைக்குறிப்பிட்டாளர் அவர்மீது ஏலம் அனுமதித்த பின்னர் உடனடியாக 25% (Less the EMD) ஏலத்தொகையைக் கட்ட வேண்டும். மற்றும் ஏலம் விடப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் மீதித் தொகையைக் கட்ட வேண்டும்.
8. **விலைக்குறிப்பீட்டாளர்கள் 24.05.2010 அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை சொத்துக்களை பார்வையிடலாம்.**

   வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளர் முத்திரைத்தாள் கட்டணம், பதிவுக்கட்டணம் மற்றும் இதர செலவுகளை அமலில் இருக்கும் விதிகளின் படி ஏற்றுக்கொள்ள வேண்டும்.
9. டெண்டர் படிவத்தில் மேற்படி கொடுக்கப்பட்டுள்ள சொத்துக்கள் விபரமானது கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரிக்கு தெரிந்த வரையில் சரியானவை. அதில் காணும் விவரங்களில் பிழையோ, தவறுகளோ, அல்லது விவரங்கள் விடுபட்டு இருந்தாலோ கீழ்கையொப்பமிட்ட அதிகாரி பொறுப்பேற்க மாட்டார்.
10. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு விலைகோரிக்கையை ஏற்றுக்கொள்வது, நிராகரிப்பது தள்ளிவைப்பது, மறு தேதிக்கு மாற்றம் செய்வது எந்த காரணமும் காட்டாமல் ஏலம் அனுமதி மறுப்பது மற்றும் விற்பனையின் விதிமுறை நிபந்தனைகளை எந்த முன்னறிவிப்புமின்றி மாற்றம் செய்வதற்கு முழு அதிகாரம் உண்டு.

**மேலும் விற்பனையின் இதர நிபந்தனைகளுக்கு ஏலத்தில் கலந்து கொள்ளும் நபர்கள், உதவி பொது மேலாளர் பாரத ஸ்டேட் பாங்கு, ஒடுக்கப்பட்ட சொத்து நிர்வாகக் கிளை, ரெட் கிராஸ் பில்டிங்ஸ், 32, மாண்டியத் ரோடு, எழும்பூர், சென்னை-600 008. Ph: 044-2888 1004. Mobile No.94458 60125 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / உதவி பொது மேலாளர்**
**பாரத ஸ்டேட் பாங்கு, SAM கிளை,**
**எழும்பூர், சென்னை-600 008.**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / துணை பொது மேலாளர்**
**இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி**
**ஓவர்சீஸ் டவர்ஸ், சென்னை-600 002.**

**இடம் : சென்னை தேதி : 12.04.2010**